நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :27.07.2020

2020-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 27 -ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் இயக்கப்பட்டு வரும் TN 36 X 8111 ஈப்பு வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. இவ்வாகனத்தில் Head Light Switch , Oil Service ,Wheel Alignment and Pannel, Indicator Assemble,Viper Blade Replacement , Repairs to Brake and Wheel and replacement of cups போன்ற வகையில் பழுதுகள் சரி செய்து தர கோரி ஓட்டுநர் திரு.டி.ஆனந்த் அவர்களின் விண்ணணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள் மேற்கண்ட வாகனம் பழுதுகள் சரி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் CAI INDUSTRIES ERODE பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் உத்தேச செலவினம் ரூ.40,000-/- ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2020-21 ஆம் ஆண்டின் திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)அவசர அவசியம் கருதி பழுதுகள் சரி செய்யும் பொருட்டு பட்டியல் தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பட்டியல் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந. க. எண். 2706/2017/இ1)

தீர்மானம் எண் : 393 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிகளில் பாதாளசாக்கடை திட்ட பணிகள் 95 சதவீத முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் **(1) வழக்கு எண்.WP No.13775/2018** இன்படி திரு.ரங்கசாமி என்பவருக்கும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை சென்னை மற்றும் ஐந்து நபர்கள், ஆணையாளர் சத்தியமங்கலம் நகராட்சி ஆகியோரின் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு 28.08.2018 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு.மணிகுமார் மற்றும் திரு.சுரமணிபிரசாத் முன்னிலையில் நடைபெற்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. **(2) வழக்கு எண்.WPNo.2615/2019-**இன்படி திரு.கே.கே.சின்னதம்பி என்பவருக்கும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை மற்றும் ஐந்து நபர்கள், ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சி ஆகியோரின் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு 20.02.2019 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி மணிகுமார் மற்றும் சுரமணிபிரசாத் முன்னிலையில் நடைபெற்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், **(3) வழக்கு எண்.WP No.6908/2020** இன்படி திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை மற்றும் ஐந்து நபர்கள், ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சி ஆகியோரின் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு 07.07.2020 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி வீணித் கோத்தாரி மற்றும் கிருஷ்ணன் ராமசாமி முன்னிலையில் வழக்கு நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு நான்கு வாரங்களுக்கு வழக்கு தள்ளி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்று ஆஜாரான திரு.பி.ஆனந்த், அரசு வழக்கறிஞர், உயர் நீதிமன்றம், சென்னை-600104 அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். மேலும்,வழக்கு கட்டணமாக ரூ.52,500-/- வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள். எனவே, இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலககுறிப்பு:**மன்றம்அனுமதிக்கலாம். (ந. க. எண். 2326/2018/இ1)

தீர்மானம் எண் : 394 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.07.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :27.07.2020

2020-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 31 -ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஜீன் 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 395 பதிவு செய்யப்பட்டது . நாள் 31.07.2020

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 396 பதிவு செய்யப்பட்டது . நாள் 31.07.2020

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சிப்பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்குகளை அரியலூர் சிமெண்ட் பேக்டரிக்கு பேல் செய்து அனுப்பப்பட்டு வருகிறது. பிளாஸ்டிக் கழிவுகளை பேல் செய்வதற்கு தேவையான சாக்கு, கிளிப் மற்றும் டொய்ன் ஆகியன தேவைப்படுகின்றது.

இதனை தினசரி தேவைக்கேற்ப உரிய நிறுவனங்களில் வாங்கிக் கொள்ள உத்தேச செலவினம் ரூ. 29,000/- த்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின்படி மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்குகளை கழிவு செய்தல் பணியின் அவசியம் கருதி நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 595/2019/எச்.1)

தீர்மானம் எண் : 397 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், பழைய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -1, கச்சேரி வீதி, சத்திரக் கடை எண்ணிக்கை -22, புதிய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -13 மற்றும் வாரச்சந்தை வளாக கடை எண்ணிக்கை - 5 ஆகியவை நகர்மன்ற தீர்மான எண். 893, 948, 949, 255 மற்றும் முன் அனுமதி தீர்மானங்களின்படி மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட கடை இனங்களை

25.06.2020 ஆம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. ஏலத்தில் கீழ்க்கண்ட கடை இனங்கள் தவிர மற்ற இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை இதனை மீண்டும் மறு ஏலம் கோரப்பட்டது. கீழ்க்ணட இனங்கள் மட்டும் சென்ற பழைய மாத வாடகை காட்டிலும் கூடுதலாக ஏலம் சென்றுள்ளதால், இதனை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | க. எண் | இனம் | ஏலதாரரின் பெயர் | பழைய மாத வாடகை | ஏலத்தில் சென்ற புதிய மாத வாடகை | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | புதிய பேருந்து நிலையம் | எஸ். தங்கவேல் | 6050 | 7100 | 01.09.2020 முதல் 31.08.2023 வரை |
| 2 | 5 | வாரச்சந்தை | வி. கௌதம் | 6100 | 7200 | 01.10.2020 முதல் 30.09.2023 வரை |
| 3 | 31 | வாரச்சந்தை | என். செல்வகுமார் | 7600 | 8800 | 01.07.2020 முதல் 30.06.2023 வரை |

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கள் கோரப்பட்டு இதில் மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள கடை இனங்கள் அரசாணை எண். 92-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச மாத வாடகை காட்டிலும் கூடுதலாக மாத வாடகை சென்றுள்ளதால் மேற்கண்ட ஏலதாரரின் உயர்ந்த பட்ச மாத வாடகையினை அரசாணை எண். 92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளின்படி உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 398 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை திரு. வி. மாரியப்பன் என்பவர் பொது ஏலத்தில் எடுத்து 01.08.2017 முதல் 31.07.2020 வரை தலா ஒரு ஆண்டிற்கு ரூ. 9,90,790/- என நடத்தி வந்துள்ளார். அரசாணை எண். 181 நாள். 19.09.2008- ன்படி இந்த உரிமம் 31.07.2020 உடன் மூன்று ஆண்டுகள் முடிவுற்றது. நகர் மன்ற முன் அனுமதி பெறப்பட்டு, இந்நகர் மன்ற தீர்மானம் எண்.340 நாள்.30.04.2020-ன்படி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 25.06.2020, 03.07.2020, 22.07.2020, 30.07.2020 ஆகிய தேதிகளில் நான்கு முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. தினந்தந்தி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது. கொரோனா நோய் தொற்று காரணமாக, கடந்த நான்கு மாதங்களில் பேருந்து போக்குவரத்து இல்லாத காரணத்தால் யாரும் பொது ஏலம் மற்றம் ஒப்பந்தப்புள்ளிகள் கோர ஒருவரும் வரவில்லை. அரசு உத்திரவின்படி பேருந்துகள் தற்போது மேலும் இயங்காத நிலையில் உள்ளது. எனவே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி இவ்வினத்தை நிர்வாகம் மூலம் ( Department Collection) வசூல் செய்யவும், இதற்கான டோக்கன்களை பிரிண்ட் செய்யவும், நகராட்சி பணியாளர்களை கொண்டு தினசரி வசூல் செய்து நகராட்சி கருவூலத்தில் செலுத்தவும், அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா நோய் தொற்று காரணமாக கடந்த நான்கு மாதங்களாக போக்குவரத்து இயங்காத காரணத்தாலும், அரசு தற்போதைய உத்திரவின்படி மேலும் பொது போக்குவரத்திற்கு தடை உத்திரவு நீடிக்கப்பட்டுள்ளதாலும், ஒருவரும் ஏலம் கோர முன் வரவில்லலை. எனவே, மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி 01.08.2020 முதல் நிர்வாகம் மூலமாக வசூல் ( Department Collection) பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பேருந்து கட்டணம் வசூல் செய்ய ரசீது அச்சடிக்கவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. இச்செலவினத்தை 2020-2021-ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. அவசர அவசியம் கருதி 01.08.2020 ஆம் தேதி முதல் நிர்வாக வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் இரசீதுகள் அச்சடிக்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 399 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பிற்காக பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்குழு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய வாரியம் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களின் கடிதம் எண்.TNBB/372/2020 நாள்.14.7.2020-இன் படி மேற்படி திட்டத்திற்கென தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் சத்தியமங்கலம் நகராட்சியின் குழுத்தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் இணைந்து இயக்கும் வகையில் ஒரு வங்கிக்கணக்கு துவங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சிப்பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியான பாரத மாநில வங்கி கிளையில் ஒரு நடப்புக்கணக்கு துவங்கிட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்குழுவின் அனுமதி கோருதல்.

அலுவலக குறிப்பு அரசின் வழிகாட்டுதல் படி வங்கிக்கணக்கு துவங்கிக்கொள்ள பல்லுயிர் பன்மிய குழு அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 1024/2018/எச்–1.**

தீர்மானம் எண் : 400 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 7

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு 27 வார்டுகளில் 101 ஆழ்குழாய் கிணறு மின் விசை பம்புகள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடிநீர் மற்றும் ஆழ்குழாய் மின் மோட்டார்கள் வறட்சியின் காரணமாக அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்திடவும் புதிய மோட்டார் பொருத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஜனவரி வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 401 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்தில் 27 வார்டுகளில் 39.892 கி.மி.அளவிற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் உள்ளன. மேற்படி குடிநீர் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகி சாலையில் செல்கிறது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக பணிகள் குடிநீர் குழாய் உடைப்பு இல்லாமல் விநியோகத்தினை சீராக செயல்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளர்கள். மேற்படி உடைப்புகள் சரி செய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் பைப்லைன் உடைப்புகள் சரி செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

மேற்படி பைப்லைன் உடைப்புகள் சரி செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் பைப்லைன் உடைப்பு சரி செய்ய பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 402 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 9

மின்னனு வாக்கு பதிவு இயந்திரம் நகர்புற உள்ளாட்சி தேர்தல், ஈரோடு மாவட்டம் மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள் கர்நாடகா மாநிலத்திலிருந்து ஈரோடு காமராஜர் மேல்நிலைப் பள்ளிக்கு எடுத்து வந்த வகையில் போக்குவரத்து கட்டணம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி, தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து பொதுவாக செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை ஈரோடு மாவட்டம் நகராட்சியில் வாக்குச்சாவடிக்கு தேவையான மின்னனு இயந்திரங்கள் பொருத்த ஈரோடு மாவட்டம் ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந. க. எணட. 20248/2019/உ. தே. 1 நாள். 29.05.2020 அவர்களின் கடிதத்தின்படி, சத்தியமங்கலம் நகராட்சியில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்திற்கான போக்குவரத்து செலவினத் தொகை ரூ.18,752/- ஐ ( ரூபாய் பதினெட்டாயிரத்தி எழுநூற்றி ஐம்பத்திரண்டு மட்டும்) தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டார வளர்ச்சி அலுவலர் ( வ. ஊ) அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். பொது நிதி மூலம் செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந. க. எண். 2518/2019/என். 1)

தீர்மானம் எண் : 403 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் திடல் மேல்நிலைத்தொட்டி வளாகத்தில் பொதுசுகாதார பிரிவு எண். 3 செயல்பட்டு வருகிறது. இதில் துப்புரவு பணியாளர்கள் சுமார் 58 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். துப்புரவு பணிகள் மேற்பார்வையிட ஒரு துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்விடத்தில் BOV (Battery Operated Vechiles) சார்ஜ் செய்ய போதிய வசதிகள் இல்லை எனவும், மின் வசதிகள்,குடிநீர் வசதிகள்,கழிவுறை வசதிகள் போன்ற அத்தியவசிய அடிப்படை வசதிகள் இல்லை எனவும் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.இக்கடிதம் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.0.50 இலட்சம் அகும்.செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு,ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இச்செவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.685/2020/இ1)

தீர்மானம் எண் : 404 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய 23 பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் (BOV) மற்றும் 47 தள்ளு வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 7220/2020/P3 நாள். 09.07.2020-ல் திடக்கழிவு முதன்மை சேகரத்தில் ஈடுபட்டுள்ளவர்களை ஜிபிஎஸ் மூலம் கண்காணித்திட தெரிவித்துள்ளார் (Mobile based application for personal tracking in door to door collection of municipal solid waste) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்திலின்படி திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்யும் செயலில் ஈடுபட்டவர்களை ஜிபிஎஸ் கருவிகள் மூலம் கண்காணிக்க முதற்கட்டமாக 23 பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களுக்கு (BOV) ஜிபிஎஸ் கருவிகள் பொருத்த உத்தேச செலவினம் ரூபாய்.1,90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 684/2020/எச்.1)

தீர்மானம் எண் : 405 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண். 21 மற்றும் வார சந்தை வணிக வளாக கடை எண். 21 ஆகிய இரண்டு கடைகளின் உரிமக் காலம் வரும் 31.08.2020 உடன் முடிவடைவதால், மேற்கண்ட கடை ஏல உரிமதாரர்கள் இறந்து விட்டதால் அரசாணை எண். 92-ன்படி வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து உரிமம் நீடித்து வழங்குமாறு வாரிசுதாரர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பத்தின் பேரில் வருவாய் ஆய்வாளர் அரசு ஆணை 92-ன்படி உரிய கட்டணம் பெறப்பட்டு நீடித்து செய்து வழங்கிட 25.06.2020-ஆம் தேதி குறிப்பு வழங்கியுள்ளார். அதன்படி கீழ்க்கண்ட பழைய ஏலதாரர் பெயரிலிருந்து பெயர் மாற்றம் செய்தும், மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீடித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | கடை எண் | வரி விதிப்பு எண் | பழைய கடை வாடகை தாரர் | தற்போது மாற்றம் செய்யப்படும் வாரிசு தாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வுக்கு பின் மாத வாடகை | புதிய உரிமம் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் | 21 | 061/4026 | ஆர் தங்கவேலு, த/பெ. ரங்கசாமி | பிரியா, க/பெ. தங்கவேலு | 13225 | 15,209 | 01.09.2020 முதல் 31.08.2023 |
| 2 | வாரச்சந்தை வணிக வளாக கடை | 21 | 061/4122 | எஸ். கே. பழனிச்சாமி, த/பெ. கருப்புசாமி கவுண்டர் | ரத்னாரேகா, த/பெ.எஸ். கே. பழனிச்சாமி | 13800 | 15870 | 01.09.2020 முதல் 31.08.2023 |

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட கடைகளின் பழைய ஏல உரிமதாரர் இறந்து விட்டதால் அரசாணை எண். 92 நெறிமுறைகளின்படி பெயர் மாற்றக் கட்டணம், உரிமம் வித்தியாச வாடகை அனைத்தும் நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் உரிய ஒப்பந்தப்பத்திரங்கள் பெறப்பட்டது. மேலும் வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி மூன்றாண்டு காலத்திற்கு பெயர் மாற்றம் செய்து நீடித்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 406 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட திடக்கழிவு லோண்மை பராமரிக்கும் பணிகளை ஒப்படை செய்தல் - பனிக்கு உரிய விளம்பர ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை ஆகிய இரு மொழிகளில **ஆங்கில மற்றும் தமிழ் தினசரி நாளிதழ்** (Decon chronicle மற்றும் மாலை முரசு) ஆகிய செய்தித்தாள்களில் விளம்பரம் செய்த வகையில் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் சென்னை என்னும் நிறுவனம் Invoice No:RPS/19-20/001657 Dt.05.03.2020 இன் படி ரூ.(57,382/-)ஐ வழங்கக்கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை ரூ.(57,382/-) ஐ ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் சென்னை என்னும் நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். **ந.க.எண் :137/2020/ எச்-1**

தீர்மானம் எண் : 407 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை பராமரிக்கும் பணிகளை ஒப்படை செய்தல் - பனிக்கு உரிய விளம்பர ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை ஆகிய இரு மொழிகளில **ஆங்கில மற்றும் தமிழ் தினசரி நாளிதழ்** (TRINITY MIRRIOR ரூ தினபூமி ) ஆகிய செய்தித்தாள்களில் விளம்பரம் செய்த வகையில் Accord Advertising Agencies – சென்னை என்னும் நிறுவனம் Invoice No. AAA/0144/20-21 Dt.14.06.2020 இன் படி (ரூ.51,608/-) வழங்கக்கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை ரூ.51,608/- யை Accord Advertising Agencies – சென்னை என்னும் நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-நகர்மன்றம்அங்கீகரிக்கலாம். **ந.க.எண் :541/2020/ எச்-1**

தீர்மானம் எண் : 408 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு அத்தாணி ரோடு உரக்கிடங்கு மற்றும் திருவள்ளுவர் திடல் MCC-ல் தயாரிக்கப்படும் உரத்தை விற்பனை செய்ய உரியமுறையில் உரிமம் பெற ஈரோடு வேளாண்மை துறை உதவி இயக்குநர் தரக்கட்டுப்பாடு அவர்களிடம் விண்ணப்பிக்க தொகை ரூ.1250/- (ரூபாய் ஆயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும்) ஈரோடு டவுன் பாரத மாநில வங்கி சலான் (சலான் எண் .31/03.07.2020- A/C-304)-ன் படி திரு.B.K.சௌந்தரராஜன், துப்புரவு ஆய்வாளரால் செலுத்தப்பட்டது. மேற்படி தொகை ரூ.1250/-க்கு திரு.B.K.சௌந்தரராஜன், துப்புரவு ஆய்வாளருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. உரவிற்பனைக்கான உரிமம் பெற்றதற்கு SBI ல் கட்டிய தொகையினை திரும்ப வழங்கலாம்.

தீர்மானம் எண் : 409 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து 31.07.2020-இல் தன் விருப்ப ஓய்வு பெறவுள்ள திருமதி. டி. சரஸ்வதி என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அன்னார் செலுத்திய சந்தா தொகை, வட்டித்தொகை மற்றும் அதற்குரிய நகராட்சி நிர்வாகப் பங்குத் தொகை ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1.148 தவணைகள் சந்தா தொகை | 2960.00 |
| 2.31.07.2020 முடிய வட்டித்தொகை | 9289.00 |
| 3.நகராட்சிப்பங்குத் தொகை | 10000.00 |
| | ---------- |
| மொத்தம் | 22249.00 |
| | ------------ |

மேற்காணும் தொகையினை அன்னாருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 752/2020/சி1)

தீர்மானம் எண் : 410 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து கடந்த 20.10.2019-இல் பணியிடையில் காலமான திரு.எம்.ராமன், த/பெ.முனியன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அன்னார் செலுத்திய சந்தா தொகை, வட்டித்தொகை மற்றும் அதற்குரிய நகராட்சி நிர்வாகப்பங்குத் தொகை ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1.148 தவணைகள் சந்தா தொகை | 2960.00 |
| 2.20.10.2019 முடிய வட்டித்தொகை | 12082.00 |
| | ---------- |
| **மொத்தம்** | **15042.00** |
| | ------------ |

மேற்காணும் தொகையினை அன்னாரது முதன்மை வாரிசுதாரரான திருமதி. ஆர். பண்ணம்மாள் என்பவருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 753/2020/சி1)

தீர்மானம் எண் : 411 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2020-இல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்ற திருமதி. ஜீ. ரங்கம்மாள், க/பெ. குருநாதன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அன்னார் செலுத்திய சந்தா தொகை, வட்டித்தொகை மற்றும் அதற்குரிய நகராட்சி நிர்வாகப்பங்குத் தொகை ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1.148 தவணைகள் சந்தா தொகை | 2960.00 |
| 2.30.06.2020 முடிய வட்டித்தொகை | 35949.00 |
| 3.நகராட்சிப்பங்குத் தொகை | 10000.00 |
| | ---------- |
| **மொத்தம்** | **48909.00** |
| | ------------ |

மேற்காணும் தொகையினை அன்னாருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 754/2020/சி1)

தீர்மானம் எண் : 412 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து கடந்த 28.02.2020-இல் பணியிடையில் காலமான திரு. பி. வேலுச்சாமி, த/பெ. பழனி என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அன்னார் செலுத்திய சந்தா தொகை, வட்டித்தொகை மற்றும் அதற்குரிய நகராட்சி நிர்வாகப்பங்குத் தொகை ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1.148 தவணைகள் சந்தா தொகை | 2960.00 |
| 2.28.02.2020 முடிய வட்டித்தொகை | 8555.00 |
| | ---------- |
| **மொத்தம்** | **11515.00** |
| | ------------ |

மேற்காணும் தொகையினை அன்னாரது முதன்மை வாரிசுதாரரான திருமதி. வீராம்மாள் என்பவருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 755/2020/சி1)

தீர்மானம் எண் : 413 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சியில் மலேரியா மஸ்துார் ஆக பணிபுரிந்து கடந்த 30.06.2020 இல் வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற்ற திரு. எஸ். நாகராஜ், த/பெ. சுப்பன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அன்னார் செலுத்திய சந்தா தொகை, வட்டித்தொகை மற்றும் அதற்குரிய நகராட்சி நிர்வாகப்பங்குத் தொகை ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1.148 தவணைகள் சந்தா தொகை | 2960.00 |
| 2.30.06.2020 முடிய வட்டித்தொகை | 31489.00 |
| 3.நகராட்சிப்பங்குத் தொகை | 10000.00 |
| | ---------- |
| **மொத்தம்** | **44449.00** |
| | ------------ |

மேற்காணும் தொகையினை அன்னாருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 756/2020/சி1)

தீர்மானம் எண் : 414 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

பொருள் : 21

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட பயான குட்டை கால்வாயில் தடுப்பு சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பண்ணாரியம்மன் நகருக்கு செல்லும் சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இப்பொருள் மீது தனி கவனம் செலுத்தி உடனே பாலம் அமைத்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே, அவசர அவசியம் கருதி புதிதாக சிறுபாலம் கட்ட உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். 2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியலில் சேர்த்து கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 415 அனுமதிக்கப்பட்டது . நாள் 31.07.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.